


ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு
SWP/ம.வ/நா.உ.தி.கு எண் :28/2025

Signature valid
Signed by: Assistant Director
Location: Kanniyakumari
Date: 2026.03.03 15:53:18

Signature valid
Signed by: Village Panchayat President
Location: Kanniyakumari
Date: 2026.05.25 14:31:28

அளவர் / உதவி வரைவாளர்

வரைவாளர் நிலை - III

மேற்பார்வையாளர்

மனைப்பிரிவு வரைபடம்

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - கன்னியாகுமரி மாவட்டம்.

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் உள்ளூர் திட்டக் குழுமம், தோவாளை வட்டம், தோவாளை ஊராட்சி ஒன்றியம், பீமநகரி ஊராட்சி, திருப்பதிசாரம் கிராமம், சர்வே எண்கள்: 279/3பி1ஏ மற்றும் 279/3பி2ஏ ஆகியவற்றில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் வரைபடம்.

(திட்டப் பகுதி)

இணையதள விண்ணப்ப எண்: **5YTFFPV1/2026/TCP**

அளவு : 1:400

வ

குறிப்பு:

மனைப்பிரிவு இடத்தின் மொத்த பரப்பளவு	-	3999.00 ச.மீ (0.99 ஏக்கர்)
உத்தேச மனைப்பிரிவு சாலைகள் (ம) மூலைமுடக்குகளின் பரப்பளவு	-	1194.03 ச.மீ
மீதமுள்ள இடத்தின் மொத்த பரப்பளவு	-	2804.97 ச.மீ
கோரிய மனைகள்	-	20 எண்ணம்
ஒதுக்கப்படும் மனைகள்	-	20 எண்ணம்
மனைப்பிரிவு இடத்தின் எல்லை	-	
நிலையிலுள்ள சாலை / அணுகுசாலை	-	
3.00மீ அகல அபிவிருத்தி செய்ய தடை செய்யப்பட்டுள்ள பகுதி	-	

பொது ஒதுக்கீடுகள்:

தான ஆவண எண்: 480/2026, நாள்:27.02.2026 மூலம் பீமநகரி ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள பகுதிகள்:

1. உத்தேச மனைப்பிரிவு சாலைகள் (ம) மூலை முடக்குகளின் பரப்பளவு - 1194.03 ச.மீ
2. அரசாணை எண்: 18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்வழங்கல்(ந.ப.1)துறை நாள்: 04.02.2019, விதி-47(6)-ன்படியும் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்: 4367/2019-பி2-2.நாள்: 05.02.2020, CASE-II-ன்படி தேவைப்படும் பூங்கா பரப்பு - 100.00 ச.மீ.
   * மேற்கண்ட பூங்கா பரப்பிற்கு அரசு வழிகாட்டி மதிப்பீட்டின் படி உரிய தொகை அரசு கணக்கில் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.
3. TNCDBR-2019, விதி 47(8)-ன் படி ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள உள்ளாட்சி உபயோக பொது ஒதுக்கீடு (A) - 27.56 ச.மீ - (0.98%)

தான ஆவண எண்: 481/2026, நாள்:27.02.2026 மூலம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள பகுதி:

தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழக உபயோக ஒதுக்கீடு (B) - 54.15 ச.மீ - (1.93%)

மூலை முடக்கு:

12.00மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.50மீ x 1.50மீ விடப்பட வேண்டும்.

நிபந்தனைகள்:

1) அரசாணை எண்: 18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்வழங்கல்(ந.ப.1)துறை நாள்:04.02.2019. அரசாணை எண்:16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்வழங்கல்(ந.ப.1) நாள்:31.01.2020-ன்படியும் நகர் ஊரமைப்பு இயக்குநர். சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்:4367/2019பி2. நாள்:05.02.2020 மற்றும் அரசாணை எண்: 181 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்:09.12.2020-ன்படி உத்தேச மனைப்பிரிவில் அமையும் மனைப்பிரிவு சாலைகள், மூலைமுடக்குகள், பொது உபயோகத்தினை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் உபயோக ஒதுக்கீட்டினை மின்சார வாரியத்திற்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்காணும் அரசாணைகளின்படி உத்தேச சாலைகளை நிர்வாக அதிகாரிகளால் நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும். அகலத்திற்கும் தார்ச்சாலையாகவும் தேவையான அடிப்படை வசதிகளை இடத்தில் மனைப்பிரிவு உரிமையாளரால் அமைக்கப்பட்ட பின் அதனை உள்ளாட்சியால் உறுதி செய்து கொண்டு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் உள்ளாட்சியால் வழங்கப்பட வேண்டும்.

2) இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளிக்கும் முன். இடத்தில் எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும் எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் உள்ளாட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.

3) இம்மனைப்பிரிவு ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் (ம) சான்றுகள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது இம்மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்பட கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதலானது எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை. அவர்களால் ரத்து செய்யப்படும்.

4) விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்பு துறையில் ஒப்புதலளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

5) ஒப்புதலளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6×4 அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரகரிக்கப்பட வேண்டும்.

6) இம்மனைப்பிரிவில் அமையும் சாலையின் போக்கினை தடுக்கும் வகையில் சுற்றுச்சுவர் எழுப்புதல் கூடாது.

7) The Tamilnadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated: 22.06.2017 have approved the Tamilnadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, market, book sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Authority.

8) அபிவிருத்தி செய்ய தடை செய்யப்பட்ட பகுதிகளில் எந்தவித கட்டுமான பணிகளோ, அபிவிருத்தி பணிகளோ மேற்கொள்ளுதல் கூடாது. அதனை உள்ளாட்சி உறுதி செய்து கொள்ளுதல் வேண்டும்.

குறிப்பு

அனைத்து அளவுகளும் மீட்டரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

LP/ NLPA NO:SWP/ 14 / 2026

PP/LP/ NLPA NO:SWP/ 20 / 2026

உறுப்பினர் செயலர் / உதவி இயக்குநர்
நாகர்கோவில் உள்ளூர் திட்டக் குழுமம்/
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
கன்னியாகுமரி மாவட்டம்